بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா 04/03/2016

**(23 JAMADULAWWAL 1437 HIJRI)**

## "NATURAL DISASTERS, OR DIVING PUNISHMENTS?"

## இயற்கைச்சீற்றங்களா, அல்லது இறைத்தண்டனைகளா?



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்திக் கொண்டு. ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹீதும் தஅவுசும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிய பிறகு கீழ் வருமாறு உரையாற்றினார்.

மனித எண்ணத்தின் அடிப்படையில் இயற்கை சீற்றங்கள் எவ்வகைகள்? கட்டுப்பாட்டின் வட்டாரத்திற்குள் கொண்டு வர முடியும் அபாயங்களும், கட்டுப்படித்திட இயலாத அபாயங்களும் உள்ளன. இந்த அபாயங்களின் கடுமையை அடிப்படையாக்கிக் கொண்டு இவையை தரம் திரிக்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக பூஅதிர்ச்சிகள், சூறாவளிகள், வறட்சிகள், வெள்ள பெருக்கு போன்றவைகள். இவையை இரண்டு வகையாக பிரிக்கப்பட்டிருக்கின்றது.

(1) மனித கரங்கள் தவறான நிலையில் செயல்பட்டது காரணமாக தோன்றிய வெளிப்படையான அபாயங்கள் உதாரணமாக சர்வதேசிய அளவிலான வெப்பம் சுற்றுவட்டார மாசு போன்றவைகள்.

(2) பூமியுடையவும் மற்று கோள்களுடையவும் செயல் மூலம் இயற்கை சுயமாகவே வெளிப்படுத்திக்கொள்ளும் அபாயங்கள். ஒருவேளை அதைப்பற்றி தீர்க்கதரிசனம் செய்துக்கொள்ள முடிந்துவிடலாம் மற்று சில வேளை அது தீர்க்க தரிசத்திற்கப்பார்பட்டதாகலாம்.

எல்லா உயிரினங்களுடையவும் படைப்பில் பூமிக்கும் மற்றும் கோள்களுக்கும் அதற்கேற்ப பங்குண்டு. உயிர்படைப்பு திட்டத்திலும் அதற்கு தெளிவான பங்கிருக்கின்றது. அதன் காரணத்தால் அவையின் நிலைநிர்பும் வீணாகுவதில்லை. ஆகவே பெரும்பாண்மை உயிர்களுடையவும் விருப்பத்திற்கேற்ப சிறு நபர்களின் விருப்பங்களை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டியதாயிருக்கும். இது அங்கீகாரம் பெற்ற ஒரு தத்துவமாகும். விஷயங்கள் முறைப்படி அமைத்துக்கொள்வதற்கு இந்த இயற்கை சீற்றங்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பங்குண்டு. அத்தோடு, சிறு நபர்கள் அதற்கு பலியாகின்றார்கள் என்ற உண்மையும் நிலைநிற்கிறது.

வாழ்கையும் மரணமும் என்ற உண்மையினை குறித்து நீங்கள் ஆய்வு நடத்திக்கொண்டால் இந்த இயற்கை சீற்றங்களுக்கு பின்னிலான பொதுவான தத்துவம் என்னவென்று உணரயியலும். இந்த பிரபஞ்சத்தில் லட்சக்கணக்கான இனத்தில் படும் உயிரினங்களை நாம் பாற்கின்றோம். அதில் ஏதாவது ஒரினத்தில் பட்ட உயிரினத்தின் எண்ணிக்கையைக்கூட எண்ணி திட்டப்படுத்திட நமக்கு முடிவதில்லை. பல்வகையான இந்த உயிரினங்களின் அடிப்படையான இலட்சியம் என்ன? விஷயங்களை ஒவ்வொரு வகையில் எவ்வாறு பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் நிச்சயமாக இந்த உயிரினங்களையாவும் படைத்திருப்பது மனிதனுக்கு சேவை செய்வதற்காகவே ஆகும் என்ற உண்மையினை உங்களுக்கு கண்டுகொள்ள இயலும். மனித மேம்பாட்டிற்காக இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான உயிரினங்கள் உயிரினை தியாகம் செய்கின்றது. அப்படியென்றால் மிக சிறந்த உயிரினமான மனிதன் எவ்வளவு சிறந்த குணமுடையவனாக உயர்ந்துகொள்ள வேண்டும்., வாழ்ந்துக்கொள்ள வேண்டும்.

மனிதனை படைத்திருப்பதன் உண்மையான இலட்சியத்தின்பால் மனிதன் உயர்ந்துவிட்டால் குறிப்பாக அவனது அனுதின வாழ்க்கையில் மனிதாபத்தோடும் நல்லொழுக்கத்தோடும் பரிமாறிக்கொண்டால் அவனது வாழ்கையில் வருகின்ற ஏராளமான விபத்துகளிலிருந்து இரட்சிப்பை பெறலாம். காரணம் இந்த இயற்கை சீற்றங்களுக்கு அதற்கான ஒரு நோக்கமும் போதமும் உண்டு. மனிதன் செயல்படுவதற்கு ஏற்றவார் அவன் பிரதிபலன் அனுபவிக்கின்றான். லட்சக்கணக்கான கோடிக்கணக்கான வருடங்களாக அவர்களுக்கு அல்லாஹு வழங்கி வந்த அருள்களை அழித்துக்கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டோ? பதில் எளிதாகும். அதாவது மனிதனுக்கு இறைவன் வாரி வழங்கிகொண்ட அருள்களை குறித்து சிந்தித்தால் இவ்வுலகம் முழுவதும் அழிந்து போனாலும் அது எஞ்சவே செய்யும். ஆனால் மனிதனோ அவனை படைத்திருப்பதன் உண்மையான இலட்சியத்தையே இழக்கவிட்டான். இறைவனையும் இறைக்கட்டளைகளையும் சுயம் எதிர்க்கின்றவனாக அவன் மாறிவிட்டான்.

இயற்கை சீற்றங்களை குறித்து கூறினால், அவை இறைத்தண்டனைகளாக பரிணமித்துக் கொள்கின்றவை என்பது ஒரு உண்மையாகும். அது ஒரு புதுமைவாய்ந்த விஷயமல்ல. மிக அதிகமான காலத்திற்கு முன்னதாகவே அது நிலை நிற்பதாகும். கீழ் வரும் திருமறை வசனத்தில் காண்பது போன்று

**“மனிதர்களின் கைகள் தேடிக்கொண்ட காரணத்தால் கடலிலும் தரையிலும் குழப்பமும் தோன்றின; தீமைகளிலிருந்து அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே அவற்றில் சிலவற்றை அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கின்றான்”** (30-42)

இயற்கை சீற்றங்களின் உண்மையான காரணங்களை பகுத்தறிவதற்கான தத்துவத்தையாகும் மேல் கூறிய திருமறை வசனம் சுட்டிக்காட்டுவது. இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன் அழிந்துபோன பட்டணங்களையும் சமூகத்தையும் இவ்விஷயத்திற்கு உதாரணமாக திருமறை நமக்கு நினைவூட்டுகின்றது. மக்கள் பொதுவாக இவையினை சாதாரணமான இயற்கை சீற்றங்கள் என புரிந்து கொள்கின்றார்கள் ஆனால் இயற்கைபரமான இவ்வகை சீற்றங்களின் உண்மையானநிலையைக் குறித்து மக்கள் விளங்கிக்கொள்வதில்லை. அதாவது எல்லாம் வல்ல இறைவனின் கோபத்திலிருந்தே மிக அதிகமான நாசம் விளைவிக்காத இவ்வகை இயற்கை சீற்றங்கள் தோன்றுகின்றது என்ற உண்மை மறைவாகயிருக்கின்றது. ஆனால் இவ்வகை இயற்கை சீற்றங்கள் இயற்கைபரமாக நிலைநிற்பவையாகயிருந்தாலும், ஒரு பட்டணத்தையோ அல்லது ஒரு சமுதாயத்தையோ அதுமல்லது ஒரு இராஜியத்தையோ அது அழித்துக்கொள்ளும் பொழுது அவை இறைகோபத்தின் அடையாளமாகவும் தண்டனையாகவும் பரிணமித்து விடுகின்றது. இது நிகழ்வதன் முக்கியமான காரணம் இறைவன் நிலைநிற்கின்றான் என்ற உண்மையை நிராகரித்து கொண்டதாலும், மனித படைப்புக்கு காரணமாக விளங்கும் இறைசக்தியை மறுத்துக்கொண்டதாலும், இறைவனை வணங்குவதிலிருந்து விலகிகொண்டதாலும், இறைவனுக்கு இணைவைத்துக் கொண்டதாலும் மட்டுமின்றி சூழ்நிலைகளின் கௌரவத்தை உணர்ந்து மனிதன் சிந்தித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கும் ஆகும்.

இந்த இயற்கை சீற்றங்களின் உண்மையான காரணம் மனித முன்னேற்றங்களின் கடந்துப்போன காலகட்டங்கள் வழி மிக விரிவாக கிடப்பதைப் பார்க்கலாம். நாம் சற்று பின்னோக்கி பார்த்தால் இந்த இறைக்கோபத்தின் அடையாளங்கள் வரும் தலைமுறைகளுக்கு ஒரு அருளென காணலாம். நம்பிகையாளர்களுக்கு இவ்விஷயம் மிக நன்றாக உணரமுடிந்திடும். இவ்வகை கடினமான சீற்றங்கள் நிகழ்வது இறைவனை வணங்குவதிலிருந்து மனிதன் தடுமாறும் பொழுதாகும். முன்காலங்களில் தோன்றிய இறைத்தூதர்களின் தீர்க்கதரிசனங்கள் நடைமுறையில் வந்தது எவ்வாறு என அவர்களுக்கு காண்பிக்கபடுகின்றது. **இன்று உங்களின் முன்னால் (இந்த நூற்றாண்டில்) ஒரு இறைத்தூதர் தோன்றியிருக்கின்றார். இறைகோபத்தின் முன் எச்சரிக்கையுடனும் ஏகனாகிய இறைவனை மட்டுமே வணங்கவேண்டும் என்ற முன் அறியிக்கையுடனும் வரும் காலங்களிலும் இறை தூதர்கள் தோன்றிக்கொண்டிருப்பார்கள். அந்த எச்சரிக்கையை முன்வைத்து மக்கள் திரும்பிகொள்ளவில்லை யென்றால் இறைகோபம் இறங்கிவிடும்** சுருக்கமாக இந்த இயற்கை சீற்றங்களுக்கு அதனுடையதான பலன்களும் உண்டு. நான் கூறியது போன்று, மனித முன்னேற்றத்தின் வரலாற்றில் அதாவது வாழ்கை முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அதற்கு மிக முக்கியமான ஒரு இடமுண்டு. மட்டுமின்றி ஒரு இராஜியத்தை சார்ந்த மக்களோ அல்லது ஒரு சமூகத்தை சார்ந்த மக்களோ இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் கட்டுப்பட்டு கொள்ளவில்லை யென்றால் அந்நிலையில் அவர்கள் செயல்களின் விளைவு என்ற வகையில் இவ்வகை சீற்றங்களுக்கு ஆளாக வேண்டியது வரும்.

படைப்பின் நோக்கம் முழுமைப்பெற்றுக் கொள்ளவில்லை யென்றால் மானிட சமூகத்தை மொத்தத்தில் அழித்துக்கொள்வதற்கான பரிபூரணமான அதிகாரம் அல்லாஹுவிற்கு உண்டு. இந்த வருடத்தில் வறட்சி கூடாமல் வெள்ளபெருக்கம் மௌரிஸியஷில் மட்டுமின்றி இந்தியா, பெறு, ஹைதி, இந்தோநேசியா போன்ற நாடுகளில் தோன்றிய வெள்ளப்பெருப்பங்களிலிருந்தெல்லாம் நாம் இரட்சிப்பினை பெற்றிருக்கிறோம் என்பதற்கு நாமே

சாட்சிகளாகின்றோம். கேடுகளும் இழப்புகளும் ஏராளமாக உருவாகின. இவ்வகை இயற்கை சீற்றங்கள் சிறிய தண்டனைகளாகும். மிக சிறிய தண்டனைகள். உண்மையான நிலையிலானது அல்ல மாறாக சிறிய நிலையிலானது. திரு குர் ஆன் நம்மிடத்தில் கூறுகின்றது. மனிதர்களின் செயல்களுக்கு அதற்கேற்றவார் உண்மையான தண்டனை இறைவன் வழங்கியிருந்திருப்பின் இந்த பூவுலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் அழிந்து போயிருக்கும். இதுவே திருமறையின் தத்துவம் அல்லது பாடம். இது மக்கள் சிந்தனைகளில் குழப்பம் ஏற்படுத்தும் ஒரு வருத்தமான விஷயமாகும். அதாவது மனிதன் செய்கின்ற தவறுகளுக்கு அப்பாவிகளாகிய விலங்குகள் எதற்கு அழிந்துவிடவேண்டும்? திரு குர் ஆனில் 16:22-டாம் வசனத்தில் பல்வேறு இனத்தில்பட்ட உயிரினங்களின் படைப்பின் நோக்கத்தை குறித்து மிக அழகாக விளக்கமளிக்கபட்டிருக்கின்றது. அவை படைக்கபட்டிருப்பது மனிதனின் நன்மைக்காகவேயாகும். மனிதன் அவனது கட்டுபாட்டின் எல்கையினை அத்துமீறிக்கொண்டால், புனிதமாக வாழ்ந்துக்கொள்ளவில்லையென்றால் அந்நேரம் அவர்களுடன் அனைத்து உயிரினங்களும் மறைந்து போகவேசெய்யும். அல்லாஹு கூறுகின்றான்.

**“மனிதர்கள் செய்யும் அக்கிரமங்களுக்காக அல்லாஹு அவர்களை உடனுக்குடன் தண்டிப்பதாக இருந்தால் உயிர்பிராணிகளில் ஒன்றையுமே பூமியில் விட்டுவைக்க மாட்டான் ஆனால் ஒரு குறிப்பிட்ட தவணைவரை அவர்களை பிற்படுத்துகின்றான். அவர்களுடைய தவணை வந்துவிட்டாலோ ஒருகணமேனும் அவர்கள் பிந்தவும் மாட்டார்கள்; முந்தவும்மாட்டார்கள்”** (16-62)

மனித சமூகத்தின் அக்கிரமங்களுக்கு அல்லாஹு உடனுக்குடன் தீர்மானம் எடுத்துக்கொண்டால் பூமியில் ஒரு உயிரினங்களும் எஞ்சியிருந்திருக்காது. உயிரினங்களனைத்தையும் படைத்திருப்பதின் நோக்கம் மனித சேவைக்கேயாகும் என்பதே உண்மை. ஆகவே மனிதர்கள் அழிந்துக்கொண்டால் அவர்களுடன் மற்று படைப்பினங்களும் மறைந்துவிடும்.

எதிர்காலத்தில் நிகழ்கின்ற விபத்துக்களை குறித்து எச்சரிக்கை விடுப்பதற்கும் அது வழி சூழ்நிலலைகளின் கௌரவத்தை பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி, தவறுகளில் நின்று அவர்களை விலகச்செய்து, புதமையான மற்றொரு வாழ்க்கையினை வழங்கிகொள்வதற்குமாக காலகட்டங்கள் தோறும் அல்லாஹுவின் தூதர் தோன்றுகிறார். மனிதன் உடல்பரமாகவும் நல்லொளுக்கபரமாகவும். ஆன்மீகபரமாகவும் சீரமைய வேண்டும். இந்த மூன்றுவகைப்பட்ட சீரமைப்பும் அவர்களுக்கு தவிர்த்துக்கொள்ளயியலாத விஷயமாகும். காரணம் அவ்வழி மூலமாகவே இறைவனை அடைய முடியும். இந்த உலகம் தவறான வழியில் சென்றுக்கொண்டிருக்கின்றது என்பதை உணர இவ்வகை அபாயங்கள் மனிதனுக்கு விழிப்புணர்வை வழங்கிக்கொள்கின்றது. நாம் இப்போது வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலம் இறுதி நாளின் பிரதிபிம்பம் போன்றாகும். அதனால் மனிதர்கள் அவர்களின் உண்மையான கடமைகளைக்குறித்து உணர வேண்டும். பூமியில் அவர்களின் உண்மையான இலட்சியம் என்னவென்று புரிந்திருக்க வேண்டும்.

முன்எச்சரிக்கை விடுப்பவனாக இறைத்தூதர் தோன்றுகின்ற சமயத்தின் சிறப்பு இயற்கை சீற்றங்கள் என்ற பெயரில் எழுதி தள்ளுகின்ற ஒவ்வொரு அபாயங்களும் பயங்கரமான நிலையில் பரிணமித்து விடுகின்றது என்பதாகும். காரணம் இச்சம்பவத்தின் பின் இறைகரங்கள்

செயல்படுகின்றது. இறைகட்டளைகளையும் இறைத்தூதரையும் மறுத்துக்கொள்வதன் காரணம் அவர்களை அழித்துக்கொள்வதற்கே இவ்வகை விபத்துக்கள் தோன்றிக்கொள்வது. இந்த சூழ்நிலை மிக கௌரவம் வாய்ந்ததாகும். காரணம் தீய நடவடிக்கைகள் எங்கும் பரவியிருக்கின்றது. எல்லா மக்களும் மதங்களும் பூமியில் பரமாதிகாரியாக ஆட்சி நடத்திக்கொள்ள விரும்புகின்றார்கள். சிலர் இறைச்சட்டங்களுக்கு பதிலாக தங்களின் சட்டங்களை நடைமுறையில் கொண்டுவர முயற்சிக்கின்ற பரிதாபநிலையிலிருக்கின்றனர். ஹஸ்ரத் மூஸா (அலை) மின் காலத்தில் பரோவா செய்தது போன்றும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மின் காலத்தில் நிம்றூத் செய்தது போன்றும். அவர்களின் இந்த பௌளதீகமான அதிகார தாகம் அவர்களின் உண்மையான இறைவனை மறக்கச்செய்கின்றது. அதனால் அல்லாஹு என்னைத்தெரியப்படுத்தியது போன்று **"எழுந்துக்கொள்ளுங்கள் ஒரு புது உலகினை படைத்திடுங்கள்"** அதற்கு இவ்வாறும் பொருளுண்டு அதாவது இந்த உலகம் அதன் அழிவின் பால் சென்றுக்கொண்டிருக்கின்றது. அந்த நாள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. அல்லாஹ் ஒரு புதிய உலகினை படைப்பான் அந்த உலகம் அவனது உண்மையான அடியார்களுக்கும் அவனுக்கு கட்டுபடுகின்றவர்களுக்குமான ஆன்மீன உலகாகும். அது இறைவனிடமும் இறைத்தூதர்களிடமும் திட நம்பிக்கை வைத்துக்கொள்ளும் உலகாகவுமிருக்கும். **அல்லாஹ் நியோகிக்கின்ற தூதர்களின் தொடரில் ஒரு கண்ணிமட்டுமாவேன் நான். மற்றுள்ளவர்கள் எனக்கு பின்னாலே வருகை தருவார்கள் அவர்கள் தோன்றுவது என்னிலிருந்தேயாகும் (அதாவது என் ஜமா அத்துவழியாகவும் என் மீதான அவர்கள் நம்பிகை வழியாகவும்)** இந்த உலகம் ஏராளமான புதுமைகளுக்கு சாட்சியாகயிருக்கும். ஒரு வகையில் உலகம் மரணித்துக்கொண்டிருக்கும் மற்றொரு வகையில் அது சீரமைந்துக்கொண்டிருக்கும். மக்கள் சட்ட அமைப்புகளுக்கு கட்டுபடுகின்றவர்களானால் சீரமைப்பும் ஏற்பட்டுவிடும். திரு குர் ஆன் ஆகின்றது நமது சட்ட அமைப்பு. உண்மையான வழிகாட்டியாக திகழும் தூய நபி முஹமது (ஸல்) வையும் அன்னாரின் பிரதி நிதிகளையும் பின்பற்றுங்கள். இஸ்லாமிய தூதர்கள் திரு நபி (ஸல்) தூது செய்தினையும் உண்மையையும் சக்திபடுத்தி கொள்வதற்கு வருவோர்கள் ஆவார்கள்.

அல்லாஹு நமக்கு உதவிபுரிவானாக! திரு நபி ஹஸ்ரத் முஹமது (ஸல்) வின் சமுதாயத்திற்கு உதவி புரிவானாக! இஸ்லாமின் பெயரில் வெற்றிக்குமேல் வெற்றிவாய்ப்பினை சூடிக்கொள்வதற்கு அல்லாஹுவின் கட்டளைகளுக்கு கட்டுபடுகின்ற மிக விரிவான முஸ்லீம் குடும்பத்தை ஒன்றிணைப்பாயாக! ஏக இறைவணக்கத்தின்பால் மனித குலத்தையனைத்தும் அழைப்பதற்கும் அவர்களின் தவறுகளை புரியவைப்பதற்கும் பொய் தெய்வங்களை தவிர்த்துக் கொள்வதற்கும் வழிவகுப்பாயாக! ஆமீன்


**Issued by**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web. www. jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**